இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**ஜி. டிலீப் அமுதன் எதிர் செயலகம், வடமாகாண சபை**

**RTIC Appeal/17/2017***(10.07.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

ஆணைக்குழு தலைவர்: திரு.மஹிந்த கம்மம்பில
ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
நீதியரசர். ஏ.டபிள்யு.ஏ.சலாம்
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

மேன்முறையீட்டாளர்: ஜி. டிலீப் அமுதன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

பகிரங்க அதிகாரசபையை பிரதிநிதித்துவம் செய்தோர்: திரு. கே. தெய்வேந்திரம், குறித்தளிக்கப்பட்ட அலுவலகர்/செயலாளர், மாகாண செயலகம், வடமாகாண சபை மற்றும் திரு. வி, ரவீந்திரன், பிரதம முகாமைத்துவ உதவியாளர்/தகவல் உத்தியோகத்தர், மாகாண செயலகம், வடமாகாண சபை.

இச்சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டாளர் வடமாகாண சபையின் அமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய 33 மாகாண சபை உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள இரு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவவலக உதவியாளரின் பெயர்கள் மற்றும் முகவரியை கோரினார். அவரால் இது தொடர்பில் மாகாண சபைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை 5(1)(k) பிரிவின் பிரகாரம் மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையின் கீழ் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆணைக்குழு பகிரங்க அதிகாரசபையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மாகாண சபைகளுக்கானவையே தவிர தனிப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கானவை அல்ல என பிரிவு 5(1)(k) சுட்டிக்காட்டுவதாக குறித்தளிக்கப்பட்ட அலுவலகருக்கு சுட்டிக்காட்டியது. இதற்கு பதிலளித்த குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் இந்த முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகள் நிரந்தரமானவையல்ல என்றும் அவை மாற்றத்திற்கு உட்படக்கூடியவை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 32(4) இன் படி பகிரங்க அதிகாரசபையின் மீதே தாம் சட்டத்திற்கு இணங்கி முடிவெடுத்தமையை நிரூபிக்கும் கடப்பாடு உள்ளது, தனியே மாகாண சபைகளின் சிறப்புரிமைக்குட்பட்டவை என தெரிவிப்பதானது அக்கடப்பாட்டை நிறைவேற்றாது என குறித்தளிக்கப்பட்ட அலுவலகருக்கு ஆணைக்குழு அறிவுறுத்தியது.

பிரிவு 5(1)(k) இன்படி குறித்த தகவல்களை வழங்குவதற்கு பகிரங்க அதிகாரசபைக்கு விலக்கு அளிக்கப்படவில்லை என ஆணைக்குழு தெரிவிக்குமானால் தாம் மேன்முறையீட்டாளர் கோரிய தகவல்களை வழங்க தயாராக இருப்பதாக குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் தெரிவித்தார். இப்பதவிகளுக்கான செலவுகள் பொதுமக்களின் நிதியினை கொண்டு மேற்கொள்ளப்படுவதால் அவை தொடர்பான தகவல்களை கோரும் உரிமை பொதுமக்களுக்கு காணப்படுவதாக குறித்த பகிரங்க அதிகாரசபைக்கு ஆணைக்குழு தெரிவித்தது.

மேன்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை அவர் தகவல் கோரிய தினத்திற்கமைவாக வழங்கப்பட வேண்டுமென கோரினார். இதற்கு பதிலளித்த குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் அவ்வாறு வழங்க முடியுமென்றும் அதற்கு ஆணைக்குழுவின் கட்டளை அவசியமென்றும் குறிப்பிட்டார்.

**ஆணைக்குழுவின் ஆணை**

வடமாகாண சபையின் அமைச்சர்கள் தவிர்ந்த 33 மாகாண சபை உறுப்பினர்களின் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் விபரங்களை மேன்முறையீட்டாளருக்கு அளிக்க மறுக்கப்பட்டமையினாலேயே இந்த மேன்முறையீடு முன்வைக்கப்பட்டது. தகவல் உத்தியோகத்தர் தகவலறியும் உரிமை சட்டத்தின் 5(1)(k) பிரிவின்படி குறித்த தகவலை அளிக்க மறுத்தமையை குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் தனக்கு சமர்ப்பித்த மேன்மறையீட்டிற்கான பதிலிலும் நியாயப்படுத்தியுமுள்ளார்.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் 5(1)(k) பிரிவில் கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
*“சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த தகவல்களை வெளியிடுவது பாராளுமன்றத்தினதோ அல்லது மாகாணசபையினதோ சிறப்புரிமைகளை மீறுவதாக இருந்தால்”*

பிரிவு 5(1)(k) இன் படி கோரப்பட்ட தகவல்களை வெளியிடுவது பகிரங்க அதிகாரசபையான வடமாகாண சபையின் சிறப்புரிமைகளை மீறுவதாக அமையாது.

இவற்றை அடிப்படையாக கொண்டு ஆணைக்குழு இம்மேன்முறையீட்டை ஏற்றுக்கொள்ளுவதுடன் குறித்த பகிரங்க அதிகாரசபையை கோரப்பட்ட தகவல்களை கோரிக்கை திகதியான 23/02/2017 அன்றில் உள்ளவாறு வழங்குமாறு பணிக்கின்றது.

மேலும் பகிரங்க சபையானது மேன்முறையீட்டாளர் கோரிய தகவலை இரு வாரங்களுக்குள் வழங்குவதுடன் அதன் பிரதியை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கும் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றது.